வாய்மொழி வரலாறுகள்

04

# கணபதி சுப்பையா வாய்மொழி வரலாறு



பன்றித்தலைச்சி அம்மன்
ஆலயப் பிரவேசம் தொடக்கம்
பல்வேறு சாதி எதிர்ப்புப்
போராட்டங்களின்
வரலாற்றுப்பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி சுப்பையா
# வாய்மொழி வரலாறு

நேர்காணல்
க. பரணீதரன்

தொகுப்பும் பதிப்பும்
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி வரலாறுகள் வரிசை - 04

# கணபதி சுப்பையா
# வாய்மொழி வரலாறு


நேர்காணல் : க.பரணீதரன்

தொகுப்பும் பதிப்பும் : தி.கோபிநாத், க.பரணீதரன்



உரிமம் : CC BY-SA 4.0

(Creative Commons-Attribution-ShareAlike)



வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

அச்சகம் : பரணி அச்சகம், நெல்லியடி.

பக்கங்கள் : 52

முதலாம் பதிப்பு : 2024 கார்த்திகை

விலை : 250/-

ISBN : 978-624-6601-25-6

ஜீவநதி வெளியீடு - 394





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

ஜீவநதியின் 394 ஆவது வெளியீடாக ஜீவநதி தொடராக வெளியிட்டு வரும் "வாய்மொழி வரலாறுகள்" நூல் வரிசையின் நான்காவது நூலாக பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பிரவேசப் போராட்டம், மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயப் பிரவேசப் போராட்டம், தேநீர் கடைப் பிரவேசப் போராட்டங்கள் உட்பட பல்வேறு சாதித் தகர்ப்புப் போராட்டங்களில் முன்னின்று இரத்தம் சிந்திப் போராடிய கணபதி சுப்பைா அவர்களது வாய்மொழி வரலாறு வெளி வருகின்றது.

கணபதி சுப்பையா அவர்கள் ஆசிரியப் பணியாற்றிவர். இளவயது முதலே தீண்டாமைக் கொடுமைகளைக் கண்டு கொதித்து அதற்கு எதிரான போராட்டங்களை முன்னின்று நடத்திவர்களுள் ஒருவர். குறிப்பாக பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசத்தின் முதன்மையான செயற்பாட்டாளராக விளங்கியவர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக பல தடவைகள் நீதிமன்றம் முதல் பொலீஸ் நிலையம் வரை சென்றவர். பொது நோக்கிற்காக தனது வாழ் நாளை அர்ப்பணித்த மனிதர். எல்லா மனிதர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் இவர்களது போராட்டம் அமைந்ததுடன் இரத்தம் சிந்தி இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடினார்கள். இவருடன் இணையாக நின்று முருகன் சின்னையாவும் செயற்பட்டார். இவர்கள் இருவரும் ஒரு காலத்தில் இம்மக்களின் விடிவிற்காய் இணைந்து போராடினார்கள்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இவர் அங்கத்துவம் வகித்தார். சாவகச்சேரி தேநீர் கடைப் பிரவேசத்திலும் முக்கியமான போராட்டகாரராக விளங்கினார். தொடர்ச்சிாக ஈழத்தில் நடைபெற்ற பல்வேறு சாதி எதிர்ப்பு போராட்டங்களில் இவர் பங்கெடுத்தவர். இவரது வாய்மொழி வரலாற்றின் மூலம் ஒரு காலகட்டத்தின் சாதிய பிரச்சினைகளை நன்கு அறிய முடிகின்றது. இவ்வாய்மொழி வரலாற்றை மேற்கொள்ள இவருடன் அறிமுகத்தை ஏற்படுத்தி தந்த கே.ஆர்.டேவிட், மு.அநாதரட்சகன் ஆகியோருக்கு நன்றி.

- க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி சுப்பையா வாய்மொழி வரலாறு

இந்த வாய்மொழி வரலாற்று நேர்காணலானது நூலக நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் செயற்றிட்டம் மூலம் பதிவு செய்யப்பட்டதாகும். நூலக நிறுவனத்தில் பணி யாற்றிய கலாமணி பரணீதரனால் பதிவு செய்த இந்த நேர்காணல் இயல்பான ஓர் உரையாடலாகவே பதிவுசெய்யப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

பரணீ:

வணக்கம். உங்கள் குடும்பம், நீங்கள் பிறந்த திகதி, கற்ற பாடசாலை என்பவை பற்றி கூறுங்கள்?

கணபதி சுப்பையா :

எனது பெயர் கணபதி சுப்பையா. எனது தந்தையார் எனக்கு இரண்டு வயதாகும் போது இறந்ததனால் தயாரால் வளர்க்கப்பட்டேன்.

எனது அண்ணாவின் பெயர் கந்தையா.

நான் 1942ம் ஆண்டு ஆனி மாதம் 2ம் திகதி கல்வயலில் பிறந்தேன்.

நான் கல்வயல் சைவப் பிரகாச வித்தியா சாலையில் கல்வியைப் பெற்றுக் கொண்டேன். அதில் கவிஞர் முருகையனின் தந்தை ஓர் ஆசிரியராக இருந்தார். இவர் எங்களுடைய கிராமத்து மக்களின் கல்வி நிலையை ஊக்குவிப்பதில் அக்கறை கொண்டிருந்தார். அக்காலத்தில் நாங்கள் பாடசாலை வகுப்பறையில் பின்புறத்து மேசை கதிரைகளிலேயே அமரலாம், பாடசாலைக் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது என வரையறை காணப்பட்டபோதும் அவர் சில முயற்சி களை மேற்கொண்டு எம்மை முன்னுயர்த்து வதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறை கொண்டிருந்தார்.

1ம், 2ம் வகுப்பு கற்கையில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டதுடன் இங்கு தரம்-7 வரை கல்வியைப் பெற்றுக் கொண்டேன். பின்பு கமலாசினி வித்தியாலயத்தில் SSC வரை கல்வி கற்றேன்.

பரணீ:

ஆரம்பக் கல்வி கற்ற பாடசாலையில் எவ்வாறான ஒடுக்கு முறையை எதிர் கொண்டிருந்தீர்கள்?

கணபதி சுப்பையா:

சிறுவயதில் அவ்ஒடுக்குமுறை பற்றி விளங்க வில்லை. எல்லோரையும் வரிசையில் இருக்க வைத்து கற்பித்தார்கள்.

நாங்கள் கிணற்றில் தண்ணீர் அள்ள முடியாது. அவர்களே அள்ளி ஊற்றுவார்கள்.

நாங்கள் குடிப்பதற்கென்று கோப்பை ஒன்று இருந்தது. அவர்கள் தண்ணீர் ஊற்றி விட்டால் மட்டுமே குடிக்க முடியுமாக இருந்தது.

இவ் நெருக்கடியிலும் ஆசிரியரான கவிஞர் முருகையனின் தந்தை எங்கள் கிராமத்துப் பிள்ளைகளை உயர்த்த வேண்டும் என்று அதிக அக்கறை கொண்டு கற்பித்தார். எல்லா சாதிப் பிள்ளைகளின் கல்வியிலும் இவர் கவனம் செலுத்தும் இவ்முயற்சியை விரும்பாத கல்வயலில் வசித்த உயர் சாதியினர், உயர் சாதியினரின் பிள்ளைகளைக் கற்பிற்பதற்காக சண்முகானந்தா வித்தி யாசாலை என்ற பாடசாலையை ஆரம்பித்தனர். அப் பாடசாலையில் உயர் சாதியினர் மட்டுமே கல்வி கற்றனர். சண்முகானந்தா வித்தியால்ய உருவாக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நான் கற்ற பாடசாலையில் உயர் சாதியினைத் தவிர்ந்த ஏனைய சாதியினரே அதிகம் கல்வி கற்றனர். தற்பொழுது அப்பாடசாலை இல்லாமலாக்கப் பட்டுள்ளது. முருகையனின் தந்தையின் பெயர் இராமு வாத்தியார். இவருடைய மகன் முருகையன் எமது கிராமத்துடன் நீண்டகாலமாக நெருக்கமாகப் உறவு பேணினார். அவருடைய தந்தை காட்டியது போல சாதி விடயங்களில் முழுமையாக என்றில்லாது ஓரளவுக்கு பொதுவான விடயங்களில் உறவு வைத்திருந்தார். இதில் ஒரு நிகழ்வை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

முருகையன் சாவகச்சேரி இந்து கல்லூரியிலேயே கல்வி கற்றிருந்தார். இக்காலத்தில் A.S.கனகரட்ணம் என்பவர் அதிபராக இருந்தார். சமசமாஜக் கட்சிக் காரரான இவர் 1960ம் ஆண்டுத் தேர்தலில் இங்கு தேர்தலில் போட்டியிட்டார். இக்காலத்தில் இராமு வாத்தியாரின் மகன் முருகையன் என்னிடம் வந்து “ஐயா எனது பள்ளிக் கூடத்தில் கூட்டம் வைக்கவுள்ளேன். ஏங்கள் சாதியினர் இதனை ஏற்றுக்கொள்ளாது அதனைக் குழப்புவார்கள். நீங்கள் எல்லோரும் வந்து பங்களித்தால் ஆதரவாக அமையும்” எனக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சென்று ஆதரவளித்தோம். இத் தேர்தலில் அவர் 500/400 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு முருகையன் நல்ல சிந்தனையுடன் இருந்தார். இவ்வாறே இராமு வாத்தியார் எம்மிடம் காட்டிய அக்கறையும் பலர் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

பாடசாலையில் நீங்கள் பின் வரிசையில் இருந்து கல்வி கற்பதனை உங்களுடைய பெற்றோர் ஏற்றுக் கொண்டிருந்தனரா?

கணபதி சுப்பையா:

ஆம்.

அந்த நாட்களில் அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும் இவ்வாறான நடைமுறையே பின்பற்றப் பட்டது. நான் இறுதியாகக் கல்வி கற்ற கமலாசினி வித்தியாசாலையில் கூட இறுதி வரிசையே எமக்கு வழங்கப்பட்டது. அது ஓர் இந்துபோர்ட் பாடசாலை ஆகும். சுப்பையா வாத்தியார் என்பவர் அதிபராகக் கடமையாற்றினார். இவர் சாதி நடைமுறையை அவ்வளவாகக் கடைப்பிடிக்கா விட்டாலும் இப்பாடசாலை சூழல் உயர்சாதி சமூகத்தினுள் அமைந்திருந்தது. எங்களைப் போன்ற பிற்பட்ட சமூகங்கள் அனைத்தும் இறுதி வரிசையிலேயே அமர்ந்து கற்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் எமது பாடசாலையிலும் பிரச்சினை ஏற்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவன் கிணற்றில் தண்ணீர் அள்ளியமை தொடர்பில் பெரும் பிரச்சினை உருவாகியது.

அன்றிரவு கிடுகினால் வேயப்பட்ட இப்பாடசாலைக்கு உயர்சாதியினர் தீயிட்டனர். எங்களுடைய சமூகத்தினைச் சேர்ந்தவர்களே தீயிட்டனர் எனக் குறிப்பிடப்பட்டாலும் நிர்வாகம் அதனை நம்பவில்லை. பின்னர் மீண்டும் இப் பாடசாலை மீளக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்பட்டது.

இவ்வாறான விடயங்கள் எமது சிறுபராயத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 1958 ம் ஆண்டில் SSC தேர்வில் சித்தியடைந்து பாடசாலையில் இருந்து வெளியேறினேன்.

பரணீ:

இவ்வாறு கிணற்றில் தாழ்த்தப்பட்ட சாதியினைச் சேர்ந்த ஒருவர் தண்ணீர் அள்ள முற்படும் போது ஆசிரியர்களா அல்லது மாணவர்களா தடுப்பார்கள்?

கணபதி சுப்பையா:

ஆசிரியர்கள் அல்ல.

மாணவர்களே இவ்வாறு தடுப்பார்கள்.

எமது சமூகத்தைச் சேர்ந்த மாணவன் தண்ணீர் அள்ளியமையை அவர்களால் தடுக்க முடியவில்லை. அந்த நாட்களில் கிராமங்களில் தண்ணீர் அள்ளுவதென்பது பெரும் பிரச்சினையாகவிருந்தது. உதாரணமாக கல்வயலில் முருகையா மாஸ்டர் வீட்டிற்கு கொஞ்சம் அருகாமையில் நடராஜா மாஸ்டர் வீட்டிற்கு அருகில் உயர்சாதியத்தவரின் நல்ல தண்ணீர் அள்ளும் கிணறு ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு நாள் தாழ்த்தப்பட்ட ஒருவரால் தண்ணீர் அள்ளப்பட்டதைத் தொடர்ந்து அன்றிரவு அக்கிணற்றினுள் உமி, குப்பைகள் என்பனவும் கொட்டப்பட்டது. மறுநாள் அதிகாலை நடராஜா மாஸ்டர் என்னை வந்து எழுப்பி, இவ்வாறு தண்ணீர் அள்ளக்கூடாது என்பதற்காக குப்பைகள் கிணற்றில் போட்ட விடயத்தை கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு நாங்கள் எங்களுடைய ஊரில் இருந்து 15 - 20 பேர் அளவில் சென்று அதனைத் துப்பரவு செய்து கிணறை இறைத்தோம். இதில் டேவிட்டும் பங்களித்திருந்தார்.

அக்காலத்தில் எமது கிராமத்திற்கு "மானாவளை" என்று பெயர். இக்கிராமத்தவர்கள் எதுவும் செய்துவிடுவார்கள் என்ற பயம் எல்லோருக்கும் இருந்தது. இதனால் பின்னர் இவ்வாறான பிரச்சினை எழுவது குறைக்கப்பட்டது.

அம்மன் கோயிலில் திருவிழா நடைபெறுகின்ற போது நடனங்கள், சின்னமேளம் போன்ற பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படும்.

எமது பகுதியினர் அதாவது தாழ்த்தப் பட்டவர்கள் பார்க்க வேண்டும் எனில் ஒரு பக்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக கயிறு கட்டப் பட்டிருக்கும். அதற்குள்ளேயே தாழ்த்தப்பட்டவர்கள் அமர வேண்டும்.

வெளியில் நின்று பார்க்க வேண்டும் என்ற நிலை எங்களுக்கு முன்னர் அதாவது 25 அல்லது முப்பது வருடத்திற்கு முன்னர் காணப்பட்டிருந்தது. ஆனால் எங்களுடைய கிராமத்தவர்களில் பெரியோர்கள் அக்கயிறு எல்லாவற்றையும் வெட்டி பெரும் கலவர மாக்கினர்.

அதன் பின்னர் அக்கோயிலில் இரவு களில் களியாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்வது இதனுடன் நிறுத்தப்பட்டது.

இன்று வரையும் இந்நிகழ்வுகள் இடம் பெறுவ தில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

மனிதர்க்கு மனிதர் முகத்திற்கு முகம் பார்க்கும் போது அதாவது உயர் சாதியினர் தாழ்த்தப்பட்டவர்களைப் பார்க்கும் போது இரண்டு பகுதியினருக்கும் இடையில் மனிதாபிமான ரீதியில் மாற்றங்கள் ஏற்படவில்லையா?

கணபதி சுப்பையா:

ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. அம்மன் கோயிலில் பெரிய கேணி ஒன்று காணப்பட்டது. நான்கு பக்களிலும் நின்று குளிக்கலாம். எமது சமூகத்தினைச் சேர்ந்தவர்கள் குளிக்கச் செல்லும் போது பாத்திரம் அல்லது வாளியைக் கொண்டு செல்வார்கள். அங்கு தொண்டர்கள் என்று சிலர் இருப்பார்கள். அவர்கள் கேணியில் இருந்து தண்ணீர் அள்ளி வந்து ஊற்றினால் அதன் போதே தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் குளிக்கலாம் அல்லது முழுகலாம்.

ஒரு தடவை ஊற்றி கிட்டத்தட்ட 15 நிமிடத்திற்குப் பின்னரே தான் அடுத்த முறைக்கு தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவார்கள். அதுவரை அவர்கள் அவ் ஈரச் சீலையுடனே நின்று கொண்டிருப்பார்கள். அப்போதெல்லாம் மனிதாபிமானம் என்பது வரவில்லை. அப்போதிருந்த அரசியல் வாதிகள் கூட இதில் தலையிடுவதால் தம் வாக்கு எண்ணிக்கை குறைக்கப்படலாம் என்பதனால் இதனைக் கண்டு கொள்ளவில்லை. இதற்கு ஒரு நல்ல உதாரணத்தைக் குறிப்பிடமுடியும்.

பொங்கல் பண்டிகையின் போது கைதடியில் மாட்டுவண்டிச் சவாரி நடைபெற்று வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபவர்களுக்கு பரிசு வழங்குவது வழக்கம். 1955ம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் மாட்டு வண்டிச் சாவரியில் "புண்ணி" என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்தவரின் மாடு இச்சவாரியில் முதலாமிடத்தைப் பெற்றிருந்தது. இதற்கு சாவகச்சேரி பாராளுமன்ற அங்கத்தவரான குமாரசாமி (பாராளு மன்ற உறுப்பினர் நவரத்தினத்திற்கு முன்பு பாராளு மன்ற அங்கத்தவராக இருந்தவர்) பிரதம விருந்தினராக பங்குபற்றினார். பரிசளிப்பு விழாவில் முதலாமிடத் தைப் பெற்ற புண்ணி என்பவர் பிரதம விருந்தினரால் மாலையிட்டு கௌரவிக்கப்படுவார் என மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்தனர். ஆனால் இவர் அவ் மாலையை மாட்டு வண்டிச் சவாரியில் வெற்றி பெற்ற மாட்டிற்கு போட்டார்.

1956இல் இச்செயற்பாடு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தது.

"மாட்டிற்கு மாலை வழங்கி கௌரவித்த அளவிற்கு மனிதரை மதிக்க வில்லையே" என்ற உணர்வு தென்மராட்சியில் தாழ்த்தப் பட்டவர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது.

இக்காலத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்ற இரண்டு கட்சிகள் காணப்பட்டது. குமார சாமி தமிழ்க் காங்கிரஸ் கட்சியை சார்ந்திருந்ததோடு, உதவி அமைச்சராகவும் பதவி வகித்தவர். நவரத்தினம் அவர்கள் தமிழரசுக் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட முற்பட்டபோது இப்பிரச்சினையை தாழ்த்தப்பட்ட கிராமங்கள் அனைத்திலும் பகிரப்பட்டு, இது தொடர்பாக தமிழரசுக் கட்சி பிரச்சாரங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து 1956ம் ஆண்டுத் தேர்தலில் குமாரசுவாமி தோற்கடிக்கப்பட்டு நவரத்தினம் (தமிழரசுக்கட்சி) வெற்றியடைந்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்கு களே வெற்றியடைய வைத்ததுடன் இப்பிரச்சினை மிகப் பெரிய பேசுபொருளாக அமைந்திருந்தது.

இதன் பின்னர் குமாரசுவாமி ஒரு முறையும் தேர்தலில் வெற்றி பெறவில்லை.

இந்நிகழ்வு தைப் பொங்கலை ஒட்டி நடைபெற்ற நிகழ்வு என்பதனால் மறுமுறை சாவகச்சேரியில் தைப்பொங்கல் அன்று கொடிகாமத்தில் இருந்து மாட்டுவண்டி ஊர்வலம் ஆரம்பித்து கச்சாய் அம்மன் கோயிலில் நிறைவுற்றது.

குமாரசுவாமியின் கட்சியினர் குமாரசாமியின் தவறை மறுதலித்து மாலை போட்டு புண்ணியைக் கௌரவிக்கவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் ஏனைய இடங்களை விட தென்மராட்சியில் கடுமையான சாதி ஒடுக்குமுறை எல்லா விடயங்களிலும் காணப்பட்டிருந்தது.

தேநீர்க் கடைகளில் தேநீர் குடிக்கச் சென்றால் நான் உட்பட போத்தல்களிலேயே தாழ்த்தப்பட்டவர் களுக்கு தேநீர் தருவார்கள்.

உணவு உண்பதென்றால் தாழ்த்தப்பட்டவர்கள் நிலத்தில் இருந்து சாப்பிட உயர் சாதியினர் மேசையில் இருந்து சாப்பிடுவார்கள். உதாரணத்திற்கு தோசை சாப்பிடும் போது பரிமாறுபவர் கறியை விடுகையில் நின்று கொண்டே ஊற்றுவார். உண்பவரின் உடை முழுக்க அவை தெறிக்கும்.

சமவுரிமையை இதில் பெற்றுக்கொள்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமத்தவர்களே நடவடிக்கை எடுத்து சாவகச்சேரி தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம்.

ஒரு நாள் திகதி அறிவித்து, அரசாங்கத்திற்கும் அறிவித்து "சமத்துவத்தினை நிலைநாட்டுவோம்" என குறிப்பிட்ட நாளில் சென்றிருந்தோம். அனைத்துக் கடைகளும் திறக்கப்பட்டு சமமாக இருத்தப்பட்டு தேநீர், சாப்பாடு வழங்கினர்.

சாவகச்சேரி தபால் பெட்டி வீதியில் "சிறீ வள்ளி" என்ற கடை மட்டும் "சுடுநீர் இல்லை தேநீர் போட முடியாது" எனக் குறிப்பிட்டனர். எமது சமூகத்தவரும் விடாப்பிடியாக நின்றனர். பின்னர் பொலிஸ் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. நானும் சின்னையா என்பவரும் பொலிஸ் நிலையம் சென்று நடந்தவற்றைப் பதிவு செய்தோம். "சாதியை கூறி உதாசீனமாக பேசினார்கள், தேநீர் வழங்க மறுத்தார்கள்" என குற்றத்தினைப் பதிவு செய்தோம்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக 1957ம் ஆண்டு சமூகக் குறைபாடுகள் ஒழுங்குச் சட்டம் என்ற சட்டம் நிறை வேற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழேயே வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு இரண்டு தவணை சென்றிருந்தேன். அதன்போது பதுளையில் ஆசிரியராக கடமையாற்றியமையால் மறுநாள் வழக்கிற்கு சமூகமளிப்பதற்காக பதுளையில் இருந்து புகையிரதத்தில் பயணித்து புகையிரத நிலையத்தில் இறங்கிய போது வழக்குப் பதிவு செய்த கடைக்காரரும், மயில்வாகனம் என்ற வழக்கறிஞரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை இடைமறித்து "நாளை வழக்கைத் தொடராது சமரச நிலைக்கு செல்வோம்" எனக் கேட்டிருந்தார்கள். எவ்வாறான சமரச நிலை எனக் கேட்டபோது "நாளை காலை வந்து எமது கடையில் தேநீர் அருந்திவிட்டு வழக்கிற்கு செல்வோம்" எனக் குறிப்பிட்டனர்.

நான் இவ்விடயத்தினை எனது ஊர் இளைஞர் களிடம் கொண்டு சென்றபோது "உயர் வகுப்பினரை நம்ப முடியாது என்பதால் வழக்கிற்கு Medical Certificate ஐ கொடுத்து வழக்கு நாளை செல்லாது விடுவோம். அடுத்த மாதம் செல்லலாம்" என ஆலோசித்தோம். அவ்வாறே Medical Certificate ஐ நீதிமன்றத்திற்கு வழங்கி விட்டு வழக்கிற்கு செல்லவில்லை.

பின்னர் ஒவ்வொரு நாளும், அக்கடைக்கு சென்று தேநீர், சாப்பாடு எடுத்துக் கொண்டோம். இவ்வாறு ஒரு மாதகாலமும் சென்றோம்.

இச்செய்தி ஊர் மக்கள் எல்லோருக்கும் பரவியிருந்ததால் எல்லோரும் இத்தேநீர்க் கடைக்கு சென்றிருந்தார்கள்.

இறுதியாக நீதிமன்றத்தில் சமரச நிலையை இரு பகுதியினரும் ஒத்துக் கொண்டதன் அடிப்படையில் வழக்கு நிறைவுக்கு வந்தது.

நீதிபதி அவர்கள் "சமூகக் குறைபாட்டு நீதி ஒழுங்குச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் சாதியின் பெயரால் தேநீர் வழங்க மறுத்தது என்பது தவறானது" என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தார். அன்றிலிருந்து இன்று வரை எதுவித பாகுபாடுமின்றி தொடர்கின்றது.

தேநீர்க் கடைப் பிரவேசத்திற்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சியில் தாழ்த்தப்பட்ட பகுதியிலிருந்து செல்லும் யாரும் மரம் ஏறிய அடையாளம் தெரியாது Full silm சேட் அணிந்து செல்வார்கள். ஆனால் கடைக் காரர்கள் சாதியை அறிந்து கொள்வதற்காக சந்தேகத்தின் பெயரில் சேட்டின் கையை இழுத்துக் காட்டும் படி கேட்பார்கள். தற்போது இவை அற்றுப் போய் விட்டன.

சமத்துவம் நிலைநாட்டலில் இளைஞர்களின் பங்களிப்பே இதில் அதிகமாகக் காணப்பட்டது.

**பரணீ:**
**மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நீங்கள் கல்வி கற்றீர்கள். அங்கு பாரிய சாதியப் பிரச்சினைகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. அது பற்றிக் குறிப்பிடமுடியுமா?**

**கணபதி சுப்பையா:**

நான் பிற்காலத்தில் பாடசாலை மாற்றம் பெற்றிருந்தேன்.

செல்வக்கிளி போன்ற எங்களுடைய ஊரார்கள் இப் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்றிருந்தார்கள்.

சரஸ்வதி பூசையின் போது தேங்காய் துருவி அவல் குழைப்பதற்கெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களை விட மாட்டார்கள்.

பின்னர் ஒரு எழுச்சி ஏற்பட்டு செல்வக்கிளி போன்றவர்கள் "நாங்களும் தேங்காய் துருவப் போகின்றோம்" எனக் குறிப்பிட்டு தாங்களும் இதில் பங்கு பற்றினார்கள். ஆனால் எல்லோரும் எதிர்த் திருந்தார்கள். அங்கு கற்பித்த மாஸ்டர்மார் எல்லோரும் அயல்கிராமங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டனர். இவர்களும் இதனைத் தடுத்து பெரும் பிரச்சினையாகியிருந்தது. இதன் பிறகு இங்கு சரஸ்வதிப் பூசை நிறுத்தப்பட்டது. சரஸ்வதிப் பூசையின் போது பூசை நடைபெறும். காலையிலேயே யாராவது ஒருவரின் வீட்டில் வைத்து பிரசாதங்கள் தயாரிக்கப்பட்டு பைகளில் கட்டப்பட்டு எல்லாப் பிள்ளைகளுக்கும் வழங்குவார்கள். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைக் கொண்டு இப்பிரசாதங்கள் செய்யப்படுவதில்லை. சாதிமுறையைக் காப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என இதனைக் குறிப்பிட முடியும். அதன் பின்பு சரஸ்வதிப் பூசையை பள்ளிக் கூடங்களில் அவ்வளவு பெரிதாகக் கொண்டாடுவதில்லை.

பரணீ:

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசம் தொடர்பாகக் கூற முடியுமா?

கணபதி சுப்பையா:

ஒவ்வொரு பங்குனியிலும் ஐந்து திங்கள் அல்லது நான்கு திங்கள் வரும். இத்திங்கள்களிலே இக் கோயில்களில் பெரும் உற்சவமாக நடைபெறும். இவ்பண்டித்தலைச்சி அம்மன் ஆலயத்திலேயே தாழ்த்தப்பட்டவர்களின் சமத்துவத்தினை நிலை நாட்ட வேண்டும் என இளைஞர்கள் மற்றும் பெரியோர்கள் மத்தியிலும் ஒரு கருத்து நிலைகொண்டு செயற்படுத்தப் பட்டது.

ஆலயநிர்வாகிகள், GS, DRO என எல்லோருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பிரவேசம் தொடர்பாக எந்த நாளில் நடைபெற உள்ளது போன்ற விடயங்களை உள்ளடக்கி கடிதம் அனுப்பினோம். சில பாராளுமன்ற அங்கத்தவர்கள் "இதனை ரகசியமாக மேற்கொள்ளலாமே" எனவும் கேட்டிருந்தார்கள். இதற்கு "இது எமது மனித உரிமை தொடர்பானது. விரும்பினால் சமஉரிமையாக்கத்தில் நீங்களும் எங்களுடன் இணைந்து ஆலயப் பிரவேசத்தில் பங்களிக்கலாம்." என நான் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் எங்களுடன் ஆலயப் பிரவேசத்தில் பங்கு பெற வில்லை. அவர்களுடைய நோக்கம் தாழ்த்தப்பட்டவர் களுக்கு ஆதரவு வழங்கினால் அடுத்த தேர்தலில் உயர் சாதியத்தவரின் வாக்குகள் கிடைக்கப்பெறாது விடலாம் என்பதனால் அதில் இவர்கள் பங்களிக்கவில்லை.

இன்று வரை தென்மராட்சியில் சாதி அடிப் படையிலேயே தேர்தல் வாக்குகள் இடம் பெறுகின்றது. முதல் கிழமை நாங்கள் ஆலயப் பிரவேசத்தில் ஈடுபட்டபோது கேணியைச் சுற்றி கம்பி அடித் திருந்தார்கள். கோயிலை மட்டும் சுற்றி கும்பிட்டு விட்டு வந்திருந்தோம். கோயிலுக்கு உள்வீதிக்குள் போக வில்லை. கேணியைச் சுற்றி ஆறு அடுக்கில் கம்பி அடித் திருந்தார்கள். கேணியில் சமத்துவம் வழங்கப்பட வில்லை.

அடுத்த திங்கட்கிழமை நாங்கள் 60 அல்லது 70 பேர் அளவில் சென்ற போது கோயில் வீதிக்கு கூடப் போக முடியாத அளவிற்கு அதனைச் சுற்றி கம்பி அடித்திருந்தார்கள்.

**1967 - 1968** ம் ஆண்டில் இது நடை பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீஸ் என்ற முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த ASP எங்களுக்கு ஆதரவளித்து இதனைப் பிழை எனக் குறிப்பிட்டார். பொலிஸ் இன்ஸ் பெக்டர் துரைசிங்கம் என்பவர் இக்கம்பிகளை அப்புறப்படுத்தும்படி ஆணையிட்டார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் துரை சிங்கம் ஒரு பக்கத்தினால் கம்பிகளை கழற்றி எங்களை கோயில் வளாகத்தினுள் செல்ல அனுமதித்தார். நாங்கள் கோயிலுக்குள் சென்ற பின்னர் இவ்வாறே கேணியிலும் சமத்துவம் வேண்டும் என்ற கோரிக்கையும் இதில் முன்வைக்கப்பட்டது.

அடுத்த திங்கள் கம்பிகள் எதுவும் அகற்றப் படவில்லை. இருப்பினும் ஏற்கனவே நாங்கள் தீர்மானித்ததைப் போல் கம்பியை வெட்டி உள்ளே செல்ல முற்பட்டோம். இதன் போது பெருமளவிலான பொலிஸ் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

நான் முதலில் இரண்டு பட்டுக் கம்பியை வெட்டியிருந்தேன். இதனைத் தொடர்ந்து பொலிஸ் என்னைக் கைது செய்தனர்.

நான் வெட்டிய இரும்பு வெட்டியை தூக்கி எறிய சின்னையா என்பவர் அதனை எடுத்து அவரும் வெட்டினார். அவருக்கு bat இனால் இடித்ததால் அவருடைய பிடரி உடைந்து காயம் ஏற்பட்டது. என்னை sub Police Station இனுக்குள் கொண்டு போய் சேர்த்தார்கள். அதுவொரு பழைய மடம். இந்த மடத்தில் நான் இருக்கும் போது ஒரு குண்டு வெடித்து புகைமண்டலமாக்கப்பட்டது. என்னை மீண்டும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு செல்லும் போது மீண்டும் இரண்டு மூன்று தரம் இச்சத்தம் கேட்டது. ஜீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வரை சென்றது. சத்தங்கள் ஒய்வடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் கோயிலுக்கு ஜீப் திருப்பப்பட்டது.

கோயில் ஐந்து ஆறு பேர் காயங் களுடன் விழுந்து கிடந்தார்கள்.

சின்னையாவை பிடித்து வைத்திருந்தார்கள். காயமடைந்தவர்களை ஜீப்பில் ஏற்றி அவர்களை வைத்தி யாலையில் இறக்கி விட்டு என்னை பொலிஸ் நிலையத்தினுள் கொண்டு சென்றனர்.

இன்ஸ்பெக்டர் துரைசாமி என்னிடம் வந்து என்னை அச்சுறுத்தினார். இவர் ஓர் உயர்சாதி வகுப்பினைச் சேர்ந்தவர். இதனை கண்ட ASP அஸீஸ் அதனைப் பற்றி விசாரித்து விட்டு அவரைப் பொருட் படுத்தாமல் குளிர்பானமும் வாங்கித் தந்தார்.

அதன் போது சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்கு தொலை பேசியில் அழைத்திருந்தார். பக்கத்து மேசை என்பதால் எனக்கு அவர் கதைத்த விடயங்கள் கேட்டிருந்தது. அன்றைய இரவு தாழ்த்தப் பட்டவர்களால் தமது ஊர் மக்களுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் ஊடரங்குச் சட்டம் போடும் படி கேட்டுக் கொண்டார். அதன்படி எமது ஊரைச் சுற்றி ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது போல எதுவும் நடை பெறவில்லை.

எங்களை பதின்னான்கு நாட்கள் றிமாண்டில் வைத்திருந்தார்கள். SP சுந்தரலிங்கம் நாங்கள் தான் குண்டு வீசினோம் என பத்திரிகைக்கு பேட்டி கொடுத் திருந்தார். அதன் பின்னர் வழக்கு நடை பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு வழக்கறிஞர்களும் இருக்கவில்லை. எங்களுடைய இனத்தவரிலும் எவரும் வழக் கறிஞர்களாக இருக்கவில்லை. உயர்வகுப்பினரில் இருந்த எவரும் எங்களுக்காக வாதாட முன்வரவில்லை. பின்னாளில் கரையார் இனத்தைச் சேர்ந்த A.அன்ரனி என்ற குருநகரைச் சேர்ந்தவர் எங்களுக்காக நீதிமன்றம் வந்தார். முதலில் PHI ஆக இருந்து பின்னர் வெளிவாரி யாக படித்து வழக்கறிஞர் ஆனவர். அவர் மூலமாகவே எங்களை பிணை எடுப்பது போன்ற செயற்பாடுகள் நடைபெற்றது. பின்னர் வழக்குக்காக கொழும்பில் இருந்து ஒரு வழக்கறிஞர் எங்களுக்காக வழக்காடினார். பின்னாளில் ஐ.நா சபைக்குச் சென்று பேசினார். அவருடைய பெயர் எனக்கு நினைவுக்கு வரவில்லை. இடதுசாரியைச் சேர்ந்தவர். அவரே என்னைப் பிணை யெடுத்து எமது ஊர்வரை கொண்டு வந்து விட்டிருந் தார். இவ்வழக்குத் தள்ளப்பட்டமை ஒரு சுவாரசியமான சம்பவம்.

நீதிமன்றத்தில் என்னுடைய வழக்கறிஞர் இன்ஸ்பெக்டர், சுந்தரலிங்கத்தை விசாரித்துக் கொண்டி ருந்தார். சுந்தரலிங்கம் என்னை குறிப்பிட்டு நான் தான் கம்பி வெட்டினேன் எனக் குறிப்பிட்டார். அதற்கு என்னுடைய வழக்கறிஞர் “ஆதாரம் இருக்கின்றதா” எனக் கேட்டார். அதற்கு இன்ஸ்பெக்டர் ஆதாரம் எதுவும் இல்லை எனப் பதிலளித்தார். அதற்கு என்னு டைய வழக்கறிஞர் கம்பியை வெட்டியது இன்ஸ் பெக்டர் துரைசிங்கம் என ஆதாரத்துடன் படம் ஒன்றைக் காட்டினார். நான் முதலே குறிப்பிட்டது போன்று இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் கோயில்வெளிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாரக் கம்பியை உடைத்து எங்களை கோயில் வளாகத்திற்கு அனுப்பியதை யாரோ ஒரு பத்திரிகைக் காரரால் படம் பிடிக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்த இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தினுள் மயங்கி விழுந்தார். அதன் பின்னர் நீதிமன்றம் வழக்கைத் தள்ளு படி செய்து தீர்ப்பளித்தது. இருப்பினும் நீதிமன்றத் திற்கு வெளியில் எனது வழக்கறிஞருடன் வீதிக்கு வந்த போது இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் என்னை சேட்டில் பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று என்னை மிரட்டிக் கொண்டிருந்தபோது தொலைபேசி அழைப்பு ஒன்று பொலிஸ் நிலையத்திற்கு வந்திருந்தது. அதில் நீதிபதி தொடர்பு கொண்டிருந்தார். அதன் பின்னர் நான் விடுவிக்கப்பட்டேன் இவ் ஆலயப்பிரவேசப் போராட்டம் பெரும் எழுச்சியான போராட்டம். இப்போராட்டத்தில் எமது கிராமம் மட்டுமன்றி யாழ்ப்பாண மாவட்டத்தின் முழு தாழ்த்தப்பட்டவர் களும் இதில் நூற்றுக்கணக்கில் பங்கெடுத்திருந்தனர். அல்வாயில் இருந்து கூட வந்திருந்தனர். சைவம் என்றொருவர் தற்போது பிரான்ஸில் வசிக்கின்றார் அவரும் வந்திருந்தார்.

எமது ஊரில் இருந்து வயது முதிர்ந்தவர்கள், இளைஞர்கள், பெண்கள், ஆண்கள் என முழுமையாக ஆதரவுடன் பங்குபற்றினர். அதன் பிறகு கோயில்களில் எல்லோரும் அனுமதிக்கப்பட்டனர்.

கொடிகாமத்தில் ஒரு தேநீர் கடையில் பிரச்சினை ஏற்பட்டு எங்களுடைய சமூகத்தவரை அனுமதிக்காது பெரும் பிரச்சினை நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்துவில் பகுதியினரும் இதற்காக குரல் கொடுத்தனர். பின்னர் இதற்காக இரண்டு மூன்று கொலைகளும் இடம் பெற்றதன் பின்னரே சமத்துவம் வழங்கப் பட்டது.

பரணீ:
தென்மராட்சியில் தற்பொழுது பூட்டிய கோயில்கள் என்று ஏதும் காணப்படுகின்றனவா?

கணபதி சுப்பையா:
தற்பொழுது பூட்டிய கோயில்கள் என்று இல்லை.
வரணியில் கண்ணகி அம்மன் கோயில் காணப் படுகின்றது. மற்றும் தற்பொழுது குறைவு.

பரணீ:
சிறுபான்மை தமிழர் மகாசபையில் அங்கம் வகித்த அனுப வங்கள் பற்றி கூறுங்கள்?

கணபதி சுப்பையா:
சிறு பான்மைத் தமிழர் மகாசபையில் நான் அங்கத்துவம் வகிக்கின்ற போது 1958ம் ஆண்டு SSC பரீட்சையில் சித்தி பெற்றிருந்தேன். தவசிப்பிள்ளை, சின்னத்தம்பி எல்லோரும் எங்கள் ஊரின் முன்னோர்கள். அவர்கள் சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் நெருக்கமான உறவைப் பின்பற்றினார்கள். அவர்கள் மூலமாகவே நாங்களும் மகாசபையில் அங்கத்து வத்தைப் பெற்று கூட்டங்களில் பங்கு பற்றினோம். எங்களுடைய கிராமத்தில் பள்ளிக்கூடங்கள் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அயல் பள்ளிக்கூடங்களிலேயே கல்வியைப் பெற்றுக் கொண்டோம். **1959**ம் ஆண்டில் எங்கள் கிராமத்திற்கும் பள்ளிக்கூடம் தேவை என உணரப்பட்டு தவசிப்பிள்ளையின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. எங்கள் ஊரில் SSC பரீட்சையில் சித்தி பெற்றிருந்த எட்டு அல்லது ஒன்பது பேருக்கு அதில் நியமனம் கிடைக்கப் பெற்றிருந்தது. தற்பொழுது பெரிய பாடசாலையாகவுள்ளது. M.C சுப்பிரமணியம் திறந்து வைத்தார். அக்காலத்தில் கல்வி அமைச்சராக பதுவுதீன் முகமத் இருந்த காலத்திலும் அதற்கு முன்னர் W. தசநாயக்க இருந்த காலத்திலும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடன் கதைத்து எமது நிலையை எடுத்துக் கூறியமையால் எம் சமூகத்தவர் களுக்கு பல சலுகைகள் கிடைத்தது. பல ஆசிரியர் கலா சாலைக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. உண்மையில் மகாசபையே சமத்துவ நிலைப்பாட்டை முன்வைத்தது. ஆனால் தீவிரமான போக்கைப் பின்பற்றவில்லை. அதாவது உயர்சாதியினரால் தாக்குதலுக்கு உள்ளாகி னால் அதனை ஏற்றுக் கொண்டு சமரசமாக எவ்வாறு தீர்க்கலாம் என்பதைப் பற்றி சிந்தித்தது. இது இளைஞர் களுக்கு ஒத்துவரவில்லை.

தீண்டாமை ஒழிப்பு பொது சன இயக்கத்தின் மூலமே கலவரங்கள், போராட்டங்கள், ஊர்வலங்கள் ஏற்படுத்தப்பட்டது. இதற்கான அடிப் படைக் காரணம் சிறுபான்மைத் தமிழர் மகாசபையே ஆகும். M.C.சுப்பிரமணியம், டானியல், அன்ரனி (வழக் கறிஞர்), பசுபதி வாசு, N.K.ரகுநாதன் (எழுத்தாளர்). இவர்கள் மகாசபையில் இருந்தே முன்னிலையை அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

**சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்த பின்னணி என்ன?**

கணபதி சுப்பையா:

1949இல் முதன் முதலில் கொமியூனிட்ஸ் கட்சி யாழ்ப்பாணத்திற்கு வந்தது. கார்த்திகேசன் வாசுதேவன் முதன் முதலில் இடதுசாரி இயக்கத்தை வளர்த்தெடுத்தார். அந்த நாட்களில் M.C சுப்பிரமணியம், டானியல், டொமினிக் ஜீவா போன்றோர் இதில் முக்கியமான வர்களாக இருந்தனர். இவர்களே இவ்சிறு பான்மைத் தமிழர் மகாசபையைத் தொடங்குவதில் முக்கியத்துவம் வகித்தனர்.

யாழ் மாவட்டத்தில் தாழ்ப்பட்டவர்கள் எங்கு எல்லாம் இருந்தார்களோ அங்கெல்லாம் ஒன்று அல்லது இரண்டு பேர் டானியலின் பெயர் சொல்லி கூப்பிடும் அளவிற்கு உயர்வாக இருந்து அதில் பங்களித்தார். பொதுசன இயக்கத்தில் ஜீவா பங்களித்தார்.

மாவிட்டபுர கோயில் பிரவேசமும் பல பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே இடம் பெற்றிருந்தது. இதில் நானும் பங்களித்திருந்தேன். தமிழர் மகா சபையின் அங்கத்தவர்களாக M.C.சுப்பிரமணியம், பசுபதி மாஸ்டர் (வடமராட்சி), தவசிப்பிள்ளை, சின்னத் தம்பி, டானியல், டொமினிக் ஜீவா, சி.குண ரட்ணம்,யோகவேல் போல், ரகுநாதன் இருந்தார்கள். தவசிப்பிள்ளை, சின்னத்தம்பி இவர்கள் எங்களுடைய ஊரைச் சேர்ந்தவர்கள். இவர்களே எங்களுக்கு முன்னோடியாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணீ:

தமிழர் மகாசபையில் உயர்சாதியைச் சேர்ந்தவர்களும் அங்கத்துவம் வகித்தார்களா?

கணபதி சுப்பையா:

இல்லை. தமிழர் மகாசபையில் உயர்சாதியினர் அங்கம் வகிக்கவில்லை.

அங்கத்துவம் வகிக்க முடியாது என்று சட்டம் இருக்கவில்லை. இருந்தாலும் அவர்கள் அங்கத்துவம் வகிக்கவில்லை.

ஆனால் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் வித்தியாசமானது.

தாழ்ந்த சாதியினர் மட்டுமல்ல உயர்ந்த சாதியின் முற்போக்கான சிந்தனையுள்ள முற்போக்குவாதிகள் இதில் பங்குபற்றினர். அதுவே இவ் இயக்கம் இன்னொரு கட்டத்திற்கு முன்னேறவும் காரணமாக அமைந்தது. உயர்சாதியினர் பலர் இதில் கலந்து கொண்டனர். மகாசபை தனியே ஒடுக்கப்பட்ட மக்களுடன் மட்டுமே இணைந்திருந்தது.

மகாசபையின் கூட்டத்தில் பொன்னம்பலம் போன்றோர் கலந்து கொண்டனர். நான் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்று முடித்த காலகட்டத்தில் பளையின் சந்தை மைதானத்தில் மகாசபையின் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு தவசி, சின்னத்தம்பி, யோகரட்ணம் அவர்களுடன் காரில் சென்றிந்தேன். பொன்னம்பலம் சாதிப் பாகுபாடு பற்றி நன்கு உணர்வு பூர்வமாகப் பேசுவார். இவர் இக்கூட்டத்தில் உணர்வு பூர்வமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக் கொண்டிருக்கையில் கூட்டத்திலிருந்த ஒருவரால் எறியப்பட்ட கல் பொன்னம்பலத்தை தாக்கியிருந்தது. கூட்டம் கலவரப்பட்டது. சடையன் என குறிப்பிடப்பட்ட ஒருவர் மேடைக்கு வந்து சால்வையால் அதனைத் துடைத்து அவரைப் பேச வைத்தார். அவர் யாரென அறிந்தால் அவர் ஒரு பிரபல சண்டியனாக பளையில் அறியப்பட்டவர். பின்னர் பொன்னம்பலத்தின் கார் கொடிகாமத்தைக் அடையும் வரை இன்னொரு காரில் வந்து அவரை கொண்டு வந்து விட்டுச் சென்றார். இதிலிருந்து சொல்ல வருவது யாதெனில் சடையன் என்பவர் ஒரு சண்டியனாக இருந் தாலும் சாதிய அடிமைப்படுத்தலின் உணர்வுகளை அவர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை காண முடிகிறது.

பரணீ:
மகாசபையின் ஆரம்பகாலச் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

கணபதி சுப்பையா:
நான் சிறு பிள்ளையாக இருந்தமையால் நான் அதைப் பற்றி அறியமுடியவில்லை.

பரணீ:
மகாசபையின் செயற்பாடுகள் எனும்போது பொதுவாக எச் செயற்பாடுகள் மேற்கொண்டது?

கணபதி சுப்பையா:
ஆலயப் பிரவேசம், தேநீர்க் கடைகளில் சமத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம் போன்ற மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு செயற்பட்டது.

நல்லூர் ஆலயம் மகாசபையின் காலத்திலேயே திறந்து விடப்பட்டது. எங்களுக்கு விபரம் தெரிந்த நாட்களில் நல்லூரே சமத்துவமாகக் காணப்பட்டது.

வைத்தியசாலை வீதியில் இரண்டு தேநீர்க் கடை காணப்பட்டிருந்தது. இவ் தேநீர்க் கடைகளும் மகாசபைக் காலத்திலேயே சமத்துவமாகத் திறந்து விடப்பட்டது.

ஜீவா கட்சியைச் சேர்ந்திருந்த காலத்தில் நாங்க அவரைச் சந்திக்கின்ற போது அவர் மேற்குறிப்பிட்ட தேநீர்க்கடைகளுக்கே எங்களை அழைத்துச் செல்வார். எமது சமூகத்தவர் ஜீவாவை “தேநீர்க் கடைகளில் முதலில் சமத்துவத்தை பெற்றுத் தந்தவர் இவரே” எனக் குறிப்பிடுவார்கள்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியைச் சார்ந்திருந்தமை யால் பின்பு ஏனைய கடைகளும் சமத்துவத்தினைப் பேணியது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கான சலுகைகளை வழங்கி அரச உத்தியோகங்களைப் பெற்றுக் கொடுத் தார்கள்.

பாடசாலைகள் பல அதாவது சாவகச்சேரி, சர சாலை, வரணி போன்ற இடங்களில் மகாசபையால் கட்டப்பட்டது. இதனால் அந்தந்தப் பகுதியிலுள்ளவர் கள் ஆசிரியர்களாகவும் உருவாக்கப்பட்டனர்.

1959 ம் ஆண்டு எங்களுடைய பள்ளிக் கூடத்திற்கு நியமிப்பதற்கு ஆசிரியர்கள் இருக்க வில்லை. SSC சித்தியடைந்தவர்கள் என ஒருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. எமது அயல் கிராமங்களில் கூட இருக்க வில்லை.

பெண் ஆசிரியர் ஒருவரை நியமிப்பதற்காக தவசி, சின்னத்தம்பி போன்றவர்கள் ஏழாலை மகா வித்தியாலத்திற்கு அருகில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நாகம்மாள் என்ற பெண்ணை ஆசிரியராக நியமித்தனர்.

1959களில் பின்னரே எமது கிராமத்தில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டது.

மகாசபையின் செயற்பாடுகளாலேயே இன்று பலர் கல்வி வளர்ச்சியில் உயர் நிலை காணப்படுகின்றது.

பரணீ:
தமிழர் மகாசபையை இடதுசாரி இயக்கம் எனக் குறிப்பிட முடியுமா?

கணபதி சுப்பையா:
மாகாசபையில் உள்ள முக்கியமானவர்கள் அதாவது டானியல், M.C.சுப்பிரமணியம் போன்றோர் கள் இடதுசாரியைப் பின்பற்றினாலும் மகாசபையில் பங்குபற்றியவர்கள் இடதுசாரிக் கருத்தை முன்வைக்க வில்லை.

பரணீ:
சிறுபான்மை தமிழர் மகாசபையின் இலக்கு தொடர்ந்தும் பேணப்பட்டதா?

கணபதி சுப்பையா:
பின்நாட்களில் தீண்டாமை ஒழிப்பு பொதுசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் நடவடிக்கைக்கு உயர்வடைந்த பின்னர் மகாசபையின் நடவடிக்கை குறைவடைந்தது. மக்கள் சமவுரிமைப் போராட்டங்கள், ஆலயப்பிரவேசங்கள் போன்றவற்றில் பங்குபற்றியமையால் தீண்டாமை ஒழிப்பு பொதுசன இயக்கத்தின் நடவடிக்கைக்கு அதிக மாக பங்களித்தனர். ஆனாலும் மகாசபை முழுமையாக இல்லாமலாக்கப்படவில்லை. M.C.சுப்பிரமணியம் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

**பரணீ:**
இன்று சிறுபான்மைத் தமிழர் மகாசபை எவ்வாறு காணப்படு கின்றது?

**கணபதி சுப்பையா:**
இன்று சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் நடவடிக்கை ஒன்றும் நடைபெறுவதில்லை. அதன் அங்கத்தவர்களும் இல்லை.

**பரணீ:**
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரவேசத்தில் நீங்கள் பங்கு பற்றியமை தொடர்பாக உங்களுக்கு தெரிந்த விடயங்களைக் குறிப்பிடமுடியுமா?

**கணபதி சுப்பையா:**
பதுளையில் பாடசாலையில் ஆசிரியராக இருந்தேன். மட்டுவில் அம்மன்கோயில் பிரவேசத்தில் ஈடுபட்டபோது 14 நாள் றிமாண்டில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன் நான் ஆசிரியத் தொழிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்டிருந்தேன். பின்னர் அரசியல் செயற்பாடு களிலேயே பங்கு பற்றியிருந்தேன்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரவேச நடவடிக்கையின் கடைசி நாள் போராட்டத்தில் பங்குபற்றினேன்.

அன்று கோயிலுக்கு முன் உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கு தண்ணீர் அடித்து சேறும் சகதி யுமாக்கப்பட்டது. இதனை கோயில் நிர்வாகம் மேற்கொண்டது. சுந்தரலிங்கம் என்பவரும் கோயில் நிர்வாகத்துடன் இணைந்திருந்தார். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயம் என்னவெனில் சங்கரப் பிள்ளை என்பவர் கோயில் ஆதீனகர்த்தாவின் பகுதியினருடன் முக்கியமானவர். இவருடைய மகன் சிவதாசன் கொமியூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இவர் பின்நாட்களில் ஈ.பி.டி.பி பராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இவர் எங்களுடன் இணைந்து நிற்க தந்தை சுந்தரலிங்கம் கோயில் பகுதியினருடன் நின்றார். அவ்வாறான இடதுசாரியாகவும், மனிதாபிமானியாக வும் சிவதாசன் செயற்பட்டார்.

கடைசி நேரத்தில் A.S.P தவராசாவை சுந்தர லிங்கம் அனுப்பி எல்லோரும் தாக்கப்பட்டு கலைக்கப் பட்டார்கள்.

A.K.நாகரட்ணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அன்றிரவு மாவிட்டபுரம் கந்த சுவாமியை கீரிமலையில் கொண்டு போய் தீர்த்தமாடுவது இறுதி உற்சவம் ஆகும். இதன்போது சுவாமி கோயில் தீர்த்தமாடும் கீரிமலையில் குண்டுகள் வீசப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பிரச்சினை ஏற்பட்டது.

பின்பு அடுத்த வருடங்களில் சமத்துவம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. சுந்தரலிங்கம் மாவிட்டபுரம் மட்டுமல்ல எல்லா கோயில்களிலும் உயர்சாதியினரின் பிரதிநிதியாக நின்றார். சின்னப்பு கணேஸ் (அல்வாயைச் சேர்ந்தவர் அரியாலையில் திருமணம் செய்தவர்.) முருகன் சின்னையா இருவரும் சேர்ந்து யாழ்ப்பாண நீதிமன்றத்தில் "எங்களை கோயிலுக்கு செல்லவிடாது சுந்தரலிங்கம் தடுக்கக் கூடாது" என வழக்கு போட்டார்கள். சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். வவுனியாவில் பாராளு மன்ற உறுப்பினராக இருந்தவர். அடங்காத் தமிழர் முன்னணி என்ற அமைப்பைப் பேணியவர். வழக்கு நீண்டநாள் விசாரிக்கப்பட்டு "சுந்தரலிங்கம் தடுக்கக் கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டது. கதிரவேற் பிள்ளை எங்களுக்காக வாதாடியிருந்தார். London Prevail council இலும் இது தொடர்பாக சுந்தரலிங்கம் வழக்குத் தொடர்ந்த போதும் சுந்தரலிங்கத்திற்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டது. அல்வாய் கணேசன் தற்போது அமரத் துவம் அடைந்து விட்டார். இவரும் சின்னையாவும் பொதுசன இயக்கத்தின் இணைச் செயலாளராக இருந்த வர்கள்.

தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரை பொதுசன இயக்கம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. உயர்சாதியத்தவர்களால் வன்முறைகள் எங்களுக்கு எதிராக நடத்தப்பட்டபோது இவ் இயக்கம் பெரும் பங்களிப்பை வழங்கி சமத்துவம் ஏற்பட உதவியது.

போராட்டமின்றி தாழ்த்தப்பட்டவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் கிடைத்தது என்று சொல்ல முடியாது. எங்களுடைய கிராமத்தில் 300 மேற்பட்ட குடும்பங்கள் வசித்தனர்.

எங்களுடைய கிராமத்தின் நிகழ்வுகளில் பள்ளர், பறையர், நளவர் என மூன்று சமூகத்தவர் ஒன்றாக இணைந்து கொள்வார்கள். யார் யார் என்ன இனத்தவர் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. திருமணங்களும் சாதி மாறி இடம்பெற்றது. எங்களுடைய இளைஞர் சந்ததியே இவ்வாறான மாற்றத்தினை உருவாக்கியது. எங்களுடைய சாதியத்தவர் வேறு சாதியத்தவரின் வீடுகளில் சென்று சாப்பிடுவோம்.

பொது நிகழ்வுகளுக்கு செல்வோம். அவர்களும் வருவார்கள்.

வடபகுதியில் எங்களுடைய கிராமத்தில் இருந்ததைப் போல நடை பெற்றிருக்காது என நினைக் கின்றேன்.

உயர் சாதியத்தவருடனும் கலப்புத் திரு மணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப் பட்ட ஏனைய சாதியத்தவர்களுடன் இணைந்தும் திருமணம் நடைபெற்றிருக் கின்றது.

**பரணீ:**

**இன்று சாதியப் போக்கு இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். இதனைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன?**

**கணபதி சுப்பையா:**

இன்று தான் சாதியப்போக்கு நிறைந்திருக்கிறது என்று நான் கூறுவேன். உதாரணத்திற்கு தேர்தல் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி அடிப்படையிலேயே நடைபெறுகின்றது. அன்று புண்ணி என்பவருக்கு மாலை போடாமையால் குமார சுவாமி எத்தனை முறை தேர்தலில் நின்று வெற்றி பெற வில்லை. தாழ்த்தப்பட்டவர்களின் வாக்கு இதில் தீர்க்க மான வாக்காக காணப்படுகின்றது. இந்த முறைத் தேர்தலிலும் Liberal College அதிபராக இருந்த நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சியில் போட்டியிட்டவர். அவருடைய பெயர் ஞாபகம் இல்லை. தமிழரசுக் கட்சி யில் தீவிரமான ஒருவர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தலிலும் வேட்பாளராக நின்றும் வெல்ல முடிய வில்லை. சாவகச்சேரி தமிழரசுக் கட்சிக்கு சாதகமான ஒரு தொகுதி.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் வெள்ளாளர் இவருக்கு வாக்களிகாது விட தோல்வியடைந்தார். இம்முறை விக்னேஸ்வரனின் கட்சியில் தேர்தலில் போட்டியிட்டபோது இவர் வெல்லப்படும் வாய்ப்பு வரலாம் எனக் கணக் கிட்டு உயர் சாதியத்தவரான வெள்ளாளர் ரவிராஜனின் மனைவியை தேர்தலில் போட்டியிடச் செய்தனர். ஓய்வு பெற்றிருந்த இப்பெண்மணி அரசியல் பற்றியே அறிந்திராதவர்.

வீடுவீடாகச் சென்று "எங்களுடைய ஆட் களுக்கு வாக்களியுங்கள்" என கேட்டார். அவர் தோல்வி யடைந்தார். இன்றும் சாதி உயர் மட்டத் திலேயே காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 60% மேல் தாழ்த்தப் பட்டவர்கள் காணப்படுகின்றார்கள் எனக் குறிப்பிடு கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர் பாராளுமன்ற உறுப்பினராக முடிகின்றதா என்ற கேள்வி காணப்படுகின்றது. தேர்தல் காலத்தில் அனைத்து கட்சிகளும் தாழ்த்தப்பட்டவர் களை தேர்தலில் நிற்க வைக்கின்றது.

காரணம் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்பதால் தாழ்த்தப் பட்ட சமூகத்தின் வாக்குகளைப் பெறுவதற்காகவே அன்றி உயர் சாதியினரின் வாக்கு களை தாழ்த்தப்பட்ட வேட்பாளர் ஒருவருக்கு வழங்க மாட்டார்கள்.

இம்முறை கைதடியில் வேட்பாளராகக் கள மிறங்கிய தபேந்திரன் அனைத்து தகுதிகளைப் பெற்றிருந்தாலும் தாழ்த்தப்பட்டவர் என்பதால் உயர் சாதியத்தவரின் வாக்குகளைப் பெறாது அதில் வெற்றி யீட்ட முடியவில்லை.

விகிதாசாரப் பிரதிநிதி நிதித்துவ முறையில் கூட அனைத்து தாழ்த்தப்பட்டவர்களும் ஒன்றிணைந்து வாக்களித்திருந்தால் கூட வெற்றி பெற்றிருக்கலாம். காரணம் தாழ்த்தப்பட்டவர்களிடம் பணபலம் என்பது இல்லை.

பரணீ:

உங்களுடைய அவதானத்தின்படி சாதியடிப்படையில் உள்ள வேறு பிரச்சினைகள் பற்றி அறிந்திருந்தால் அது பற்றியும் குறிப்பிடுங்கள்?

கணபதி சுப்பையா:

சாதிப்பிரச்சினை முன்பு சமூகப் பிரச்சினையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தற்போது வடமாகாணத்தின் யாழ் மாவட்டத்தில் சாதி முக்கிய பங்கைச் செலுத்துகின்றது. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் மாகாணசபைத் தேர்தலுக்குள் தெரிவு செய்யப்படுவதைத் தவிர வேறு எங்கும் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு இல்லை.

அரசியல் இன்று சாதிமயமாக்கப்பட்டுள்ளது என்றே குறிப்பிட வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் கட்சிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர்களை மூன்றாம், நான்காம் இடங்களில் நிற்க வைத்து தங்களின் வாக்கு களைப் பெற்றுக் கொண்டார்கள்.

நானும் இதில் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றேன்.

ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை விட தபேந்திரனுக்கு கல்வித்தகமை உட்பட அனைத்து தகுதிகள் இருந்தும் அவரால் வெற்றியீட்ட முடிய வில்லை. அனைத்து விடுதலை இயக்கங்களிலும் ஏதோ வொரு விதத்தில் சாதி தன் இருப்பைத் தக்க வைத்திருந்தது.

இடதுசாரி இயக்கங்களிலும் ஓரவுக்கு மீறி அதில் முன்னேற முடியவில்லை.

தாழ்த்தப்பட்டவர்களை அனைத்து இயக்கங் களும் தங்களது போராட்டங்களுக்கு பயன் படுத்துவதில் கவனத்தைச் செலுத்தியதைத் தவிர தாழ்த்தப்பட்டவர் களின் சுய வளர்ச்சிக்கு ஒரு காலமும் துணையாக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு - 1

# ஆலயப் பிரவேசம்

கி.லக்ஷ்மணன் எம்.ஏ

ஆலயப் பிரவேசம் பற்றிப் பல வருடங்களுக்கு முன்பே என் மனத்தில் எழுந்த சிந்தனைகளுட் சில வற்றை இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிடுவது பொருத்த மென எண்ணுகின்றேன்.

இந்தியாவிலே இருபத்தைந்துக்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றுள் அண்ணா மலைப் பல்கலைக்கழகம், காசி இந்து பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் தனிச்சிறப்புடையன. இரண்டும் இரண்டு பெரிய க்ஷேத்திரங்களில் அமைந்திருப்பதே அத்தனிச்சிறப்பு. தென்னிந்தியாவில் மிகப் பிரசித்தி பெற்ற சிவ க்ஷேத்திரம் சிதம்பரம். அச் சிதம்பரத் திலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கட்டப் பட்டுள்ளது. அதைப் போலவே வட இந்தியாவிலே மிகப் பிரசித்திபெற்ற சிவ க்ஷேத்திரமாகிய காசியிலே, காசி இந்துப் பல்கலைக்கழகம் உள்ளது.

பூர்வ புண்ணியத்தினாலோ என்னவோ இந்த இரண்டு க்ஷேத்திரங்களிலும் தங்கி, இரண்டு பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயிலும் பேறு எனக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. தமிழில் எம்.ஏ. பட்டம் பெறும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டும், தத்துவஞானத்தில் எம்.ஏ பட்டம் பெறும் பொருட்டு காசி இந்துப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டும் கல்வி பயின்றேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தபோது சிதம்பரம் நடராசர் ஆலயத்துக்கும், காசியில் மாணவனா யிருந்தபோது காசி விஸ்வநாதர் ஆலயத்துக்கும் வாரந்தோறும் செல்வது எனது வழக்கமாயிருந்தது.

வழிபட விரும்புவோர் எவரும் இந்த இரு ஆலயங்களுள்ளும் தடையெதுவுமின்றிச் சென்று வழிபடலாம். சாதி பற்றிய கட்டுப்பாடெதுவும் அங்கு கிடையாது. காசியில் இன்னுமொரு விசேடம் உண்டு. காசி கங்கைக் கரையிலுள்ளது. கங்கை இந்துக்களுக்கு மிகப் புனித நதி. உங்கையில் நீராடி விட்டுக் குடத்திலோ அல்லது செம்பிலோ கங்கை நீரை எடுத்துச் சென்று எவரும் தாமே தம் கையாலேயே லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யலாம்.

பாரத தேசத்தின் நானாதிக்குகளிலிருந்தும் அங்கு வரும் பக்தர்கள் தாம் கொண்டு வந்த கங்கைநீரை லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதோடு நில்லாமல் தமது கையால் அந்த லிங்கத்தைத் தொட்டு வழிபட்டுப் பரவசமடைவதைத் தினமும் காணலாம்.

இவைகளைக் காணும் போதெல்லாம் எனக்கு எங்கள் இலங்கையிலுள்ள ஆலயங்கள் தான் நினைவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும். காசியைப் போல மூல விக்கிரகத்தையே எல்லாரும் தொட்டு வழிபட அனுமதிக்காவிடினும் - எல்லாரும் ஆலயத்துட் சென்று வழிபட வழி செய்யக்கூடாதா என்ற எண்ணந் தான் எனக்கு ஏற்படும்.

*****

இந்தியாவிலே சாதி வித்தியாசமின்றி எல்லாரும் உள்ளே சென்று வழிபடக் கூடியவை இந்த இரண்டு ஆலயங்கள் மட்டுமன்று அங்குள்ள பிரசித்திபெற்ற எல்லா ஆலயங்களுள்ளும் எல்லோரும் சென்று வழிபடலாம்.

இவைகளைக் கண்ணுறும் போதெல்லாம் தொடக்கத்திலே பெரும் எதிர்ப்புக்களையெல்லாம் சமாளித்து ஹறிஜன ஆலயப் பிரவேசத்துக்கு வழிசெய்தவர்களும், அவ்வியக்கத்தின் முன்னணியிலே நின்று தம் செயலாலும் பேச்சாலும் எழுத்தாலும் அதனைச் சாதித்தவர்களுமான பேரறிஞர் சிலரை நான் நினைப்பதுண்டு. சுப்பிரமணிய பாரதி, சேர் சி.பி.ராம சுவாமி ஐயர், மதுரை அட்வகேட் வைத்தியநாதையர், காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி, முதுபெரும் அரசறிஞர் ராஜாஜி ஆகியோரே இத்துறையில் என் மனத்தில் முதலிடம் பெறுவோர். இவர்கள் அனைவரும் சாதியில் மிக உயர்ந்ததாகக் கருதப்படும் பிராமணர் குலத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும் தென்னகத்திலே தீண்மை யொழிப்பு, ஹறிஜன ஆலயப்பிரவேசம் ஆகிய இயக்கங்களை வழிநடத்தியவர்களுள் முக்கியமானவர் களும் இவர்களே. சேர் சி.பி.ராமசுவாமி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாங்கூர் ராஜ்யத்தின் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் அதன் தலைநகராகிய திருவனந்தபுரத்தி லுள்ள மிகப் பிரசித்திபெற்ற ஆலயமாகிய பத்மநாதர் ஆலயத்தை ஹரி ஜனங்களுக்காகத் திறந்து விட்டவரெனப் பாராட்டப்படுபவர்.

அதைப் போலவே மதுரை வைத்திநாதையரும் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்துள் ஹரிஜனங்கள் செல்ல வழிசெய்தவருள் முக்கியமானவராகக் கருதப்படுபவர். தீண்டாமையொழிப்பு, ஆலயப் பிரவேசம் ஆகியவற்றின் வரலாற்றிலே இவர்களுடைய பெயர்கள் நிலையான இடத்தைப் பெறும் என்பதை எவரும் மறுக்கமாட்டார். இவர்களை நினைக்கும் போதெல்லாம் எங்கள் நாட்டிலும் இவர்களைப் போன்ற தலைவர்கள் தோன்றலாகாதா என்ற எண்ணமே என் மனத்தில் ஏற்படும்.

*****

இலங்கையிலே இன்று ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்பவர்கள் தமக்குச் சாதகமாகப் பல காரணங் களைக் கூறுகின்றனர். தாழ்ந்தவர்களெனக் கருதப்படு வோரை ஆலயத்துள் விடுவது ஆகமத்துக்கு விரோதம் என்பது அவர்கள் கூறும் ஒரு காரணம். காலாதி காலந்தொட்டு நிலவி வரும் வழக்கத்துக்கு மாறானது என்பது இன்னொரு காரணம். தாழ்த்தப்பட்டவர்கள் துப்புரவில்லாதவர்கள் என்பது கற்றொன்று. கோவில்களுக்குள் புக விரும்பும் ஹரிஜனங்களுள் எத்தனை பேர் உண்மையாகவே வழிபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கத்துடன் போக நினைப்பவர்கள் என்பதும் இவர்கள் கேட்கும் கேள்விகளுள் ஒன்று.

இவைகளைக் கேட்போர் மனத்திலே இந்த ஆட்சேபனை ஒவ்வொன்றுக்கும் பதிலாகப் பல மாற்றுக் கேள்விகளை எழுப்பலாமெனத் தோன்றுவது இயல்பு.

இன்றைய ஆலயங்களில் நடை பெறும் நித்திய நைமித்தியுங்கள் எவ்வளவு தூரம் ஆகமங்களையொட்டி இம்மியும் பிசகாமல் நடை பெறுகின்றன?

எவ்வளவு தூரம் அவற்றிலிருந்து விலகிவிட்டன? தொன்று தொட்டு இடம்பெற்ற வழக்கங்கள் எல்லா வற்றையும் அப்படியே இன்று எல்லோரும் கடைப்பிடிக் கின்றோமா?

எத்தனையோ வழக்கங்களை மாற்றிக் கொண்டோமல்லவா? கோவில்களுக்குள் புகும் உயர் சாதியினர் எல்லோரும் நூற்றுக்கு நூறு துப்புரவா யுள்ளவர்களா?

துப்புரவுக்குறைவு தான் தாழ்த்தப் பட்டவர் களைக் கோயிலுள் விடாது தடுப்பதற்குக் காரணமாயின் அவர்களுள் துப்புரவானவர்களை விடுவதற்கு உடன்பாடா?

உட்செல்லும் உயர் சாதியினர் யாவரும் உண்மையாகவே வழிபாட்டை மட்டுமே நோக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுள்ளவர்களா?

வெளியிலே நிற்பவருள் உண்மையாக வழிபட விரும்புவோரையாவது உள்ளே செல்வதற்கு விடச் சம்மதம் கிடைக்குமா?

இவைபோன்ற இன்னும் பல மாற்றுக் கேள்விகள் ஆதரிப்போர் மனத்தில் எழக்கூடும்.

இவையனைத்தும் நிதானமாக நோக்கும் போது ஆலயப் பிரவேசத்துக்கு மாறானோர் தாங்கள் பல காலமாகப் பழக்கப்பட்ட முடிவுகளுக்குக் காரணங்கள் காண முயல்கின்றார்களேயொழியக் காரணங்கள் இட்டுச் செல்லும் முடிவை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லையென்பது நன்கு புலனாகும்.

– நகீரி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டு சிறப்புமலர் 1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு - 2

# எந்த உலகிலே இருக்கிறீர் ஐயரே?

முருகையன்

சிற்றூர்க் கோயிலின் திருப்பெருந் திருவே,
குருக்கிரா மத்துக் கோயிலின் குருவே!
ஐயரே, மெய்யரே! ஆயிரம் வணக்கம்.
ஒரு சில கேள்விகள் - பதில் தரல் வேண்டும்.

பஞ்சமர் என்று நீர் பகுத்துக் காட்டுவோர்
நிந்தியா சௌசிகள் என்றும், அதனால்
பிறப்புத் தொடங்கி இறப்பு வரைக்கும்
துடக்குப் பிடித்த துர்ச்சனர் என்றும்,
கோபுர வாசலைத் தாண்டி அப்பாலே
நுழைந்தால், புனிதம் கொடித்திடும் என்றும்,
ஆகமச் சான்றுகள் காட்டுவீர், ஐயரே!

சத்திய மாய் ஒரு சமுசயம் எமக்கு
மனசார இதற்கு மறுமொழி சொல்லும்:
எத்தனை ஆகமம் எடுத்துப் படித்தீர்?
காமிகம், யோகசம், சிந்தியம், காரணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம்,
அஞ்சுமான், சுப்பிர பேதம் முதலிய
ஆகமம் இருபத் தெட்டெனக கூறினீர்.
இத்தனை நூல்களுள் எத்தனை ஓதினீர்?
இவற்றின் நிறங்களை ஆயினும் அறிவிரோ?
சங்கத எழுத்துகள் எல்லாம் தெரியுமோ?
அருச்சனை மந்திரம் அறுபதோ, எழுபதோ
திவசம, மாளயம், சவுண்டி, கிருத்தியம்
சுற்றுப் பலிக்கெனச் சொல்லும் மந்திரம், ய
யாக பூசைகள் - இவற்றைப் போன்ற
தேவையின் பொருட்டு நீர் மூன்று கொப்பிகளில்
எழுதி வைத்திருக்கும் பத்ததி தவிர
எந்த ஆகமமும் முழுமையாய் ஓதி
உணர்ந்துகொண்டீரோ? உண்மையைச் சொல்லும்.
சங்கத எழுத்துகள் எல்லாம் தெரியுமோ?
ஆகமம், ஆகமம் என்று வெருட்டுவீர் -
தில்லையில் இன்று சிவனே இல்லையோ?

எங்கள் சிற்றூர் இறையவன் கோயிலின்
கதவுகள் திறந்தால், அரிசனர் புகுந்தால்,
அங்கவன் சந்திதி அசுசிப்படும் என
எம்மவர் நம்ப எடுத்துச் சொல்கிறீர்.
தில்லை எனப்படும் சிதம்பரம் தெரியுமா?
கோயில் எனப்படும் கோயிலின் கோயில்!
கபாடம் திறந்தன; கவிழ்ந்ததா உலகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பர நடம்பயில் செழுங்கழல் இறைஞ்சுவோர்
சாதி மறந்து சைவம் நாட்டினார்.
அன்பே சிவம் எனும் அறநெறி காட்டினார்
செந்தூர் திறந்தது; மதுரையும் திறந்தது.
திருப்பரங் குன்றமும் பழனியும் திறந்தன.
பிறப்பினால் இழிவு பேசும் பேதைமை
அறுப்பதே அறம் என ஆன்றோர் ஒப்பினார்.
இது கடந்தேறியும் பல பத்தாண்டுகள்
சென்று மறைந்தன; சிவ சிவா, சிவ சிவா!!
எந்த உலகிலே இருக்கிறீர் ஐயரே?
நீர் விதந்தோதும் ஆகமப்படியே
அரிசனர் நுழைவதால் ஆலயம் கெடுமேல்,
தில்லையில் இன்று சிவனே இல்லையோ?

ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் என உரைக்கும் நீர்
பக்கபலமாய்க் கொள்ளும் உம் துணைவர்
எப்படிப் பட்ட ஒழுக்கம் உடையவர்?
சைவாசாரம் சற்றும் இன்மையால்
அரிசனர் அசுத்தர் ஆம் எனக் கூறும் நீர்
உறு துணை என்றே கருதி அணைப்பவர்
எப்படிப்பட்ட ஒழுக்கம் உடையவர்?
நெந்தலிப் பொரியல் நித்தமும் மெல்வதில்
மெத்த விருப்புடை மேலவர் எல்லாம்
உள்ளார் அல்லரோ, உமக்குத் துணையாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இவர்போல் எத்தனை பேரோ?
பல்லு நலிந்த பான்மையால், பாக்குரல்
தேடி அதற்குள் நெத்தலி இடித்துத்
தூளாய் விழுங்குதல் சுத்த சைவமோ?

உமக்குத் துணையாய் உள்ளவர் ஒருவரும்
கள்ளுக் குடிப்பதே இல்லையோ? இருக்கலாம்.
சமய தீட்சை பெற்று, நித்தமும்
சந்தியா வந்தனம் தவறாச் சீலரோ?
இருக்கலாம்; எல்லாம் இருக்கலாம். ஆயினும்
தன்னெஞ் சறிவது பொய்யா நடுநிலை
என்னென்பதனை நீர் இம்மியும் அறிவிரோ?

குக்கிராமத்துக் கோயிலின் குருக்களே!
மறுமொழி என்ன? வணங்கி நாம் கேட்கிறோம்.

கோபுர வாசலைக் கடந்து உள் நுழைந்திட
எண்ணுவோர் நாத்திகர் என்கிறீர். ஐயரே!
சைவத் திருமுறைச் சான்றுகள் கண்டால்
நீரே நாத்திகர்; நிறுவலாம், இதனை!!
கோயிலின் கோயிலாம் கோயிலே தில்லை.
தில்லையில் இன்று சிவனே இல்லை
என்ற பாங்கிலே எண்ணும் நீரே
நூற்றுக்கு நூறு நாத்திகர் ஆவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால், ஐயரே; அகந்தை எனப்படும்
சைவவிரோதம் தவிர்த்தல் வேண்டுமே.
சைவவிரோதம் தவிர்த்திடீ ராயின், உம்
சாதி பேதம் உட்பட, தகாத
அநீதி அனைத்தும் அறந்தரும்
பெரும்புயலிடையே துரும்பெனத் தொலையுமே.

– நன்றி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டு சிறப்புமலர் 1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு -3

# கொழும்பிலொரு கோலம் சிவலோகமானாலும்...

இ.சிவானந்தன்

சிவம் சைவம் என்பவற்றின் பொருள்விளக்கம் போல அவர்
மனங்கனிந்த தீட்சண்யப் பாரவையினால் ஒளி பாய்ச்சி
மக்களுக்கு வழிகாட்டி வரமருளு மோர் புருஷர்,
கந்தபுரா ணத்தையெலாம் கரை கண்ட கருத்தாளன்,
நாவிலெழும் நறுந்தமிழில் நாயன்மார் நடமிடுவர்,
ஞானகுரு யாழ்ப்பாண யோகாது ஒரு சீடன்
புராணம் படிப்பதிலே பொழுதுபட்டுப் போனாலும்
வீட்டுக்கு வந்தே விடாய்தீர்க்கும் ஓர்சீலன்,
அறைதேடி வந்தாரென் அருகேயோர் பொடியனுடன்,
குருசிஷ்ய பக்தியிலே குன்றிப்போய் அப்பொடியன்
இருமலினை அடக்கிக் கொண் டி வர்பின்னால் நின்றிருந்தான்

"இன்றுதான் வீட்டைவிட்டு வெளிக்கிட் டோம் நாம்
இவன் என்ரை மகனல்லச் சொல்லப் போனால்
ஈசனுடைய மக்களெலாம் ஒன்றே தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றுமுதல் இன்றுவரை ஆர்வமுடன் கற்று,
பீ.ஏ. படிப்பதற்கும் ஆளான இவன் வீரன்.
எழுத்தறி வித்தவன் இறைவன் ஆதலால்,
இவருக்கோர் அறையெடுத் துதவ வேணும்நீர்;

வெள்ளையன் இருக்கும்போது விஷயமே வேறை தம்பி,
இலவசக் கல்விவந்து இன்றைக்கு நிலைமை கெட்டு
அனைவரும் படிக்கின்றார்கள் பகிடியா படிப்பு? மேலும்
இன்னொரு விஷயம் தம்பி இதனை நீர் அறியமாட்டீர்,
எங்களின் வீட்டின் மேற்கே இரண்டொரு வேலிதள்ளி
அங்கொரு கொட்டில் போட்டுக் கள்ளினை விற்கும் பள்ளன்
கனகனின் கடைசிப்பையன் கதிரனும் கூடத்தம்பி,
இம்முறை இவரோடிங்கே படிக்கென வருகிறானாம்;
இப்படி இருக்குதின்று கலியுகம் காட்சி", என்றார்.
என்றவர் இருமலோடு பேச்சினை நிறுத்தச் சொன்னேன்:

"அறைதானே வேண்டுமென்றீர் அடுத்துள வீதிதன்னில்
இருபதாம் வீட்டிலே ஓர் சிறுஅறை உண்டுபார்த்து
அதனை நீர் எடுக்கலாமே வசதியும் படிப்பதற்கு
எதனையும் பார்த்துவிட்டால் இப்பவே முடிவாய்ப்போரும்"
என்றந்தப் பெரியார் தம்மை என்னுடன் இட்டுச்சென்றேன்.
அனைத்தையும் பார்த்தபின்னர்
திருப்தியோ டென்னைக்கேட்டார்.
"கக்கூசே கைலாசம், காசுதான் போனாலென்ன?
ஞாயமாய் வாடை கேட்டுக் கொடுக்கலாம் ஆனால் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையின்மேல் உள்ளறூமில் இருப்பவர் யாரோதம்பி?"

ஆவலாய்க் கேட்கிறீர்கள் அவரொரு மேதை; தீரன்.
படிப்பிலை புலியே அந்தப் பருத்துறைப் பொடியரையா",
என்றனோ சடுதியாக நினைவினை மீட்டுக் கேட்டார்,
"பருத்துறையிற் பறைப்பொடியன் ஒருத்தனே
போன ஆண்டில்
முதல்வனாய்ப் "பாசு" பண்ணிப் பரிசில்கள் பெற்றான் அந்தச்
சிவனருள் என்றுபேர் ஆள் இவர் அவர் தானோ?" என்றார்.

"பறையரோ பருத்துறையோ எனக்கது தெரியாதையா
இவரொரு மேதை என்றமட்டுமே அறிவேன்," என்றேன்.
என்றதும் வீட்டுக்கார மனிசியைப் பார்த்துக் கேட்டார்.
"எமக்கறை பிடிச்சுதானால் இதுமட்டும் செய்யவேணும்,
மேலறைப் பொடியர்தம்மைக் கீழறை விட்டீரானால்
மேலறை தன்னை நாங்கள் விருப்புடன் எடுப்போ" மென்றார்.
இவற்றினைக் கேட்ட வீட்டார் இலேசிலே முறுவல் பூத்து,
மேலறைத் தம்பி கீழே இறங்கிட மாட்டாரென்றும்
கீழறை வேண்டுமாயின் வாடகை அறுபதென்றார்.
சிவம் சைவம் எனமதித்த பெரியவர் என்னை நோக்கி
"பறைப்பொடியன் மேலிருக்க இப்பொடியன் கீழேயாகில்
சிவனார் வதியுமொரு சிவலோக மானாலும்
எமக்கது வேண்டாம் தம்பி, இறங்கிவா போவோம்,"
என்றார்.

– நஸீறி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டு சிறப்புமலர் 1969



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு -4

## நாவலன் சாதிவெறிக் காவலன்

எஸ்.வில்வராஜன்

நாவலன் நல்லோனென்று
நாட்டிலே உரைக்கும் சில்லோர்
நாவலன் சாதிக் கொள்கை
நன்றாக அறிகுவாரோ?
நாவலர் சாதி பார்ப்போர்
காவலர், என்ற உண்மை
பாமரர் அறிவர், ஆனால்
பாவலர் அறியார் போலும்!
ஒடுக்கப் பட்டோர்களுக்காய்
ஒரு துளியேனும் சிந்தான்
வெறுக்கப்பட்டேனே, அன்னார்
வெண்ணீறு பூசியென்ன?
உடுக்கப்பட்டாடையுண்டேல்
உர்புல மாவதோடா?
ஒடுக்கப்பட்டோர்கள் காலில்
உடன்விழு! பாபம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக நிறுவனத்தின் ஆவணகம்

நூலக நிறுவனத்தின் பல்லூடக நூலகத்தில்
(www.noolaham.org,
www.noolaham.media)
கணபதி சுப்பையா
வாய்மொழி வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
பதிவு செய்தவர் : க.பரணீதரன்
காலம் : 2020
நேரம்: 55 நிமிடம் 42 செக்கன்
https://aavanaham.org/islandora/object/noolaham%3A3446



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொங்கல் பண்டிகையின் போது கைதடியில் மாட்டுவண்டிச் சவாரி நடைபெற்று வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு வழங்குவது வழக்கம். 1955ம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் மாட்டு வண்டிச் சாவரியில் "புண்ணி" என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்தவரின் மாடு இச்சவாரியில் முதலாமிடத்தைப் பெற்றிருந்தது. இதற்கு சாவகச்சேரி பாராளுமன்ற அங்கத்தவரான குமாரசாமி (பாராளு மன்ற உறுப்பினர் நவரத்தினத்திற்கு முன்பு பாராளு மன்ற அங்கத்தவராக இருந்தவர்) பிரதம விருந்தினராக பங்குபற்றினார். பரிசளிப்பு விழாவில் முதலாமிடத்தைப் பெற்ற புண்ணி என்பவர் பிரதம விருந்தினரால் மாலையிட்டு கௌரவிக் கப்படுவார் என மக்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்தனர். ஆனால் இவர் அவ் மாலையை மாட்டு வண்டிச் சவாரியில் வெற்றி பெற்ற மாட்டிற்கு போட்டார்.

1956இல் இச்செயற்பாடு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தது.

"மாட்டிற்கு மாலை வழங்கி கௌரவித்த அளவிற்கு மனிதரை மதிக்க வில்லையே" என்ற உணர்வு தென்மராட்சியில் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது. "

– கணபதி சுப்பையா

ISBN : 9789550958511

9789550958511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org